1984 ஏப்ரல் 10]

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : துணைத் தலைவர் அவர்களே, இடத்தை கேரண்டியாகச் சொல்ல முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் பகுதியில் எந்தத் தொழிலும் கிடையாது. இங்கே இருக்கும் அத்தனை அமைச்சர்களுக்கும் அது தெரியும். ஆகவே, கும்பகோணத்தில் தொழில் தொடங்க ப்ரஃப்பெரன்ஸ் கொடுத்து, இப்படிப்பட்ட தொழில்களைத் தொடங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலில் இரண்டு உறுப்பினர்களுக்கு அளித்த அந்த பதிலைத்தான் இந்த உறுப்பினரின் கேள்விக்கும் அளிக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

415—(*வினா எண். 20019) திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கி உதவியுடன் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்வதற்கான தொழிற்சாலை புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை.

திரு. த. மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. ஆண்டுதோறும் வறட்சியால் பாதிக்கப்படும் மக்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு வழியில்லை. வறட்சி காலத்திலும், விவசாயம் இல்லாத காலத்திலும், வேறு உபதொழில் செய்வதற்கு அந்த மாவட்டத்தில் வழியில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் கரும்பு பயிராகின்ற காரணத்தாலும், நமக்கு காகிதம் தேவைப்படுகிற காரணத்தாலும், அந்தத் தொழிற்சாலையை புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு மீண்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உலக வங்கியின் உதவியோடு கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்வதற்கான தொழிற்சாலை ஒன்று திருச்சி மாவட்டம் புகளூரில், சுமார் 200 கோடி ரூபாய் மூலதனத்தில் துவங்கப்பட்டு, இந்த ஆண்டு வருகிற செப்டம்பர் மாதத்தில் இருந்து அங்கே

காகித உற்பத்தி தொடங்க இருக்கிறது. அங்கே அமைக்கப் பட்டுள்ள அந்தத் தொழிற்சாலை இந்தியாவிலேயே பரிட் சார்த்தமான முறையில், ஏறக்குறைய 200 கோடி ரூபாய் மூலதனத்தில், 50,000 டன் செய்தித்தாளும், 40,000 டன் எழுது காகிதத்தாளும் தயாரிக்கும் திறன் கொண்டது. அந்தப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலை விரைவில் காகித உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது. இதைத் தவிர வேறு எந்த மாவட்டத் திலும் காகிதத்தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. த. மாரிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலிக்கிறபோது, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலிப்பது என்று பிரச்னை இல்லை. இப்போது தொடங்கப்பட்டுள்ள தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கி காகிதத்தைக்கொண்டு வரவேண்டும் என்பதுதான் இப்போது அரசாங்கத்திற்கு இருக்கும் முக்கிய பிரச்னை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40.)

திரு. இரெ. இராசமாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற் சாலையை திருச்சி மாவட்டத்தில் தொடங்க இருப்பதாகச் சொன்னார்கள். அதோடு வேறு எந்தத் தொழிலையும் தொடங்குகின்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் அறிவித்தார்கள். தமிழ்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு காகிதம் உற்பத்தி செய்ய இன் னொரு தொழிற்சாலையை தமிழ்நாட்டில் தொடங்க அமைச்ச ரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலை வரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று இந்தக் காகிதத் தொழிற்சாலை தவிர வேறு எந்தத் தொழிற்சாலைகளையும் அரசு ஆரம்பிப்பதாக இல்லை என்று நான் சொல்லவில்லை. கரும்புச் சக்கையை மூலப்பொருளாக கொண்டு புது டெக்னாலஜியில் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏறத்தாழ 200 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்டு, வருகின்ற செப்டம்பர் மாதத்தில் அது பணியைத் தொடங்க இருக்கிறது. அதைப்போன்ற இன்னொரு தொழிற்சாலையை ஆரம்பிக்கும் திட்டம் இப்போது இல்லை.